NEW WAY OF BEING CHURCH

newbec

21 ஜூலை 2024
பொதுக்காலம் ஆண்டின் 16 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

முதியோர் மற்றும் நோயுற்றோரை அக்கறையுடன் பராமரித்தல்



# இயேசுவின் வீட்டை அடைய உங்கள் வழியைக் கண்டறியுங்கள்

காலங்காலமாக அவருடைய மக்களை மீட்டு மீண்டும் ஒன்றிணைத்ததற்காகவும், கட்டியெழுப்பியதற்காகவும் கடவுளுக்கே மாட்சியும் புகழும் உரித்தாகுக!

மக்கள் வழிதவறிச் சிதறிப்போனார்கள். சிலைவழிபாடும் ஒழுக்கக்கேடும் எங்கும் பரவிக்கிடந்தது. அதன்பின் கடவுள் எரேமியா வாயிலாகப் பேசினார். இவைகளை நடக்க அனுமதித்த யூதாவின் சமயத் தலைவர்களை கடவுள் தண்டிப்பார் என்று கடுமையான எச்சரிக்கை விடுத்தார். அநீதியான தலைவர்கள் தண்டிக்கப்பட்டாலும் மக்கள் இதுபோன்ற நம்பிக்கைக் கொண்ட வார்த்தைகளால் ஆறுதல் அடைந்தனர். சிதறுண்டு போன ஆடுகளைக் கூட்டிச் சேர்த்து மீண்டும் தம்முடைய மந்தைக்குக் கூட்டிவருவார்; இனி அஞ்சத்தேவையில்லை. ஒன்றும் காணாமல் போகாது. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஆடுகளை மேய்க்கும் நல்ல மேய்ப்பரான கிறிஸ்துவின் வருகையையும் எரேமியா முன்னறிவித்தார்.

யூதர்கள் தங்களுடைய வாழ்வை ஒதுக்கப்பட்ட யூதரல்லாதவரோடும் பகிர்ந்துவாழவேண்டும் என்று இயேசு வந்து அவர்களுக்குக் கற்பித்தார். அவர்களைப் பிரித்திருந்த தடைகளை தம்முடைய சிலுவையால் தகர்த்து தொலையில் இருப்போர் அருகில் இருப்போர் அனைவருக்கும் அமைதியை நிலைநாட்டினார். சிலுவையில் அவர் சிந்திய இரத்தத்தால், கடவுளின் ஒரே ஆவியாருக்குள் நாம் கடவுளோடு ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் நற்செய்தியை அறிவிக்கவும், தீய ஆவிகளை விரட்டவும், உடல்நலமற்றோரைக் குணப்படுத்தவும் அனுப்பப்பட்ட திருத்தூதர்கள் திரும்பிவருவதை வாசிக்கிறோம். அவர்கள் பயணம், பணி, என்று அனைத்தையும் நிறைவேற்றியபின் களைப்பாகவும், நடமாட இயலாதவர்களாகவும் இருப்பதை இயேசு கண்டார். அவர்களை தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுக்குமாறு சொன்னார்.

இயேசுவும் திருத்தூதர்களும் அங்கிருந்து சென்றபின் மக்கள் கூட்டமும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றது. இதைக் கண்ட இயேசு அவர்கள் மீது பரிவுகொண்டார். அவர்களை வழிநடத்த யாரும் இல்லை; அவர்களுக்கு உதவிதேவை என்பதைக் கண்டுகொண்டார். அவர்களை வழிநடத்தவேண்டிய சமயத்தலைவர்களால் அவர்கள் தேடும் பதில்களைத் தரமுடியவில்லை. ஆயனில்லா ஆடுகளைப் போல அவர்கள் இருந்தனர். இயேசு அவர்கள் மீது பரிவும் இரக்கமும் கொண்டு அங்கு அமர்ந்து அவர்களுக்குப் போதித்தார்.

பெரும்பாலும் நம்முடைய திருஅவை மற்றும் சமூகங்களில் நாம் பொறுப்பெடுத்திருக்கும்போது, அது நம்மை சோர்வடையவும் களைப்புக்குள்ளாக்கவும் செய்வதை உணர்கிறோம். இதுபோன்ற சமயங்களில் நாமும் ஓய்வெடுக்கவேண்டும். கூட்டத்திலிருந்து சற்றுவிலகி இயேசுவுடன் சிறிது நேரம் தனிமையில் நேரத்தை செலவிட்டு, நம்மைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.

நம்முடைய நல்ல ஆயனாகிய மீட்பரிடம் நம்பிக்கை வைக்கவும்,நம் வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் அச்சத்தைப் போக்கி அமைதியைக் கொண்டு வரவும், நம்மை அன்புசெய்து அக்கறை காட்டும் அவருடைய கரங்களில் நம்பிக்கையோடு நம்மை இணைத்துக்கொள்வோம். ✜

நரை திரண்டவருக்குமுன் எழுந்துநில். முதிர்ந்தவர் முகத்தை மதித்து நட; உன் கடவுளுக்கு அஞ்சி வாழ்; நானே ஆண்டவர்

லேவியர் 19:32







### இன்றைய இறைவார்த்தை:

நற்செய்தி குறிப்பு:

எரேமியா 23:1-6

திபா: 23: 1-6

எபேசியர் 2: 13-18

மாற்கு: 6: 30-34

INTERNAL CIRCULATION ONLY
BUL 29/2024

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org